[1973 மார்ச் 2

கள்ளச் சந்தையில் சினிமா டிக்கட்டுகள் விற்பனே

* 207 விஞ—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 டிசம்பர் 25-ந் தேதிக்கும், 1972 ஜனவரி 2-ந் தேதிக்கும் இடையில் சென்னையில் சினிமா டிக்கட்டுகளே கள்ளச் சந்தையில விற்றதாக எத்தனே பேர் கைது செய்யப்பட்டனர் ?

(இ) அவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனே என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: (அ) மொத்தம் 25 பேர்.

(இ) அவர்களில் 20 பேர் ரூ. 2 முதல் ரூ. 10 வரை அபாராதம் விதிக்கப் பட்டனர். மற்ற 5 பேர் நன்னடத்தை நிபந்தனேயின் பேரில் விடுவிக்கப் பட்டனர்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, முன்பைவிட இப்போது மின்சார வெட்டு அதிகமாக இருப்பதால், கள்ளச்சந்தைகளில் அதிகமாக டிக்கட்டுகள் விற்கப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, போலீசார் மாறுவேடம் அணிந்து சென்று அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : இப்படிச் சிலர் சினிமா டிக்கட்டுகளே வாங்கி, அவைகளேப் பின்னல் கள்ளச் சந்தைகளில் விற்பனே செய்வதைத் தடுக்க மாநகரக் காவல் சட்டம் 76-ம் பிரிவின்படி காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து கண்டுபிடிக்கப்படுபவர்களுக்குத் தண்டனேயும் வழங்கப்படுகிறது. ஆனல், அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனே அவர்கள் செய்கின்ற குற்றத்திற்குப் போதுமானதாக இல்லே. ஆகவே, 1888-ம் ஆண்டு மாநகர காவல் சட்டத்தில் 34-ஏ என்ற ஒரு புதிய பிரிவைச் சேர்க்கக் கருதப் பட்டுள்ளது. அதனுல் குற்றவாளிகளுக்கு அதிகப் படியான தண்டனே அளிக்கப் படும் ; தண்டனேக் காலம் அதிகமாக்கப்பட்டுக் குற்றங்கள் தடுக்கப்படும். துப்பறிதல் முறையிலோ அல்லது மாறுவேடம் அணிந்து சென்ருே இந்த மாதிரியான குற்றங்களேக் கண்டுபிடிப்பது என்பது இயலாத ஒன்று. ஏனென்ருல், மாறுவேடம் படங்களில்தான் காட்டப்படுகின்றது. (

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்தக் கள்ள டிக்கட் விற்பனே சில தனிப் பட்டவர்களேத் தவிர, தியேட்டர் முதலாளிகளால் கூட செய்யப்படுகிறது. நானே அதைப் பார்த்திருக்கிறேன். ஆகவே, தியேட்டர் முதலாளிகளால் கள்ள டிக்கட் விற்பனேச் செய்யப்படுவதையும் தடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

1973 மார்ச் 2]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தியேட்டர் முதலாளிகள் இப்படிப் பட்ட டிக்கட்டுகளைத் தரவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள். சிலபேர் ரசிகர் மன்றங்களை வைத்து, அந்த மன்றங்களின் பெயரால், முதலாளிகளிட மிருந்து டிக்கட்டுகளை வாங்கி அதிக விலைக்கு விற்றுவிடுகிறார்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சென்னை மாநகரில் புதிய படங்கள் வரும்போதுதான் கள்ள டிக்கட் விற்பனை அதிகமாக இருக்கிறது. அப்படி கள்ள டிக்கட்டுகளை வைத்திருப்பவர்கள் சினிமா கொட்டகைக்குப் பக்கத்தில் எங்காவது ஓரிடத்தில் நின்று கொண்டு 'விசில் சவுண்ட்' கொடுக்கிறார்கள். டிக்கட் கிடைக்காதவர்கள் அங்கேதான் டிக்கட் விற்கிறார்கள் என்று தெரிந்து அங்கே போய் வாங்கிச் செல்கிறார்கள். எனவே, இதைப்பற்றி போலீசாருக்கு தகவல் கொடுத்து விசிலடிப்பவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்த ஒலி வந்தாலும் வா விட்டாலும் இந்தக் கள்ளச்சந்தை டிக்கட் விற்பனையைத் தடுப்பதற்கு காவல் துறையினர் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்தக் கள்ள டிக்கட்டுகள் ரசிகர் மன்றங்களால் விற்பனைச் செய்யப்படுவதாகச் சொன்னார்கள். இம்மாதிரியான நடைமுறை இப்போது புதிதாக ஏற்பட்டிருக்கிறதா? அல்லது இதற்கு முன்பே இருந்து வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கள்ள டிக்கட் விற்பனை புதிதாகவும் ஏற்பட்டிருக்கிறது. முன்பும் இருந்திருக்கிறது. 1971-ம் ஆண்டில் கூடக் கள்ள டிக்கட் விற்றதாக 750 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, அப்பொழுதிலிருந்தே கள்ள டிக்கட் விற்பனையைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை: சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு மாலை நேரங்களிலே பொழுதுபோக்க வழியில்லாமல், சினிமா பார்க்கச் செல்கிறோம். அங்கே போனால் டிக்கட் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே, எங்களுக்கு பொழுதுபோக்கிற்கு வசதியாக டிக்கட்டுகள் தர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டிக்கட்டுகள் அந்தந்த தியேட்டர்களில்தான் விற்கப்பட வேண்டும். அதை மீறி யார் விற்றாலும் அது கள்ளச் சந்தை டிக்கட்டு என்றுதான் கருதப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். கணேசன் : சில பிரபல திரைப்பட நடிகர்கள் தங்கள் படங்களின் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தில், ரசிகர் மன்றங்களின் சார்பில் டிக்கட்டுகளை வாங்கி பதுக்கி வைத்து, டிக்கட்டுகள் கிடைக்கவில்லை என்ற ஒரு பரபரப்பை ஏற்படுத்திவிடுவதாக தகவல் வருகிறது. அதைப்பற்றி ஆராயப்படுமா ?

(பதில் இல்லை).

திரு கே. என். குமாரசாமி : இப்போது தியேட்டர்களில் ரிசர்வேஷன் முறை இருப்பதால், பாதி ரிசர்வேஷன் செய்யப்பட்டவுடன், மீதி இருக்கக் கூடிய பாதி டிக்கட்டுகளை 'ரிசர்வேஷன் ஆகிவிட்டது ; வேறு டிக்கட் இல்லை' என்று சொல்லி, அவைகளை கள்ளச் சந்தையில் விற்றுவிடுகிறார்கள். ஆகவே ரிசர்வேஷன் முறை தடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ரிசர்வேஷன் செய்யப்படுவதைத் தடுத்துவிட்டால் கள்ளச்சந்தை டிக்கட் விற்பனை இன்னும் அதிகமாகிவிடும்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, ஒரு நபருக்கு ஒரு டிக்கட் என்ற முறையில், தியேட்டருக்கு உள்ளே செல்கிறபோது, ஒருவழிப் பாதையில் செல்வதற்கு ஏற்பாடு செய்து, அப்போது டிக்கட்டு கொடுத்தால் கள்ள டிக்கட் விற்பனை தடுக்கப்படும். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கள்ளச்சந்தை டிக்கட்டை வாங்குகிறவர்கள், கூட்ட நெரிசலில் முண்டியடித்து கஷ்டப்பட்டு டிக்கட் வாங்குவதைவிட இது மேல் என்று கருதி, அதிக விலை கொடுத்து கள்ள டிக்கட்டுகளை வாங்கிவிடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு காவல்துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இந்த கள்ள டிக்கட்டுகளை வெளியே மட்டுமன்றி கவுண்டரிலும் விற்பனை செய்கிறார்கள். அண்மையில் நானும் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் அரங்கேற்றம் சினிமா பார்க்கச் சென்றிருந்தோம். டிக்கட் இல்லை என்று சொல்லி ரூ. 3-10-க்கு உள்ள டிக்கட்டை 5 ரூபாய்க்கு விற்றார்கள். நாங்கள் 5 ரூபாய் கொடுத்துதான் அந்த டிக்கட்டை வாங்கி படம் பார்த்தோம். ஆகவே, கவுண்டர்களையும் கண்காணிக்கும் பொருட்டு காவல் துறையினருக்கு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கப்படுமா ?

1973 மார்ச் 2]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எப்படியாவது அரங்கேற்றத்தைப் பார்த்துத்தான் தீரவேண்டுமென்ற நிலையில் 5 ரூபாய் கொடுத்து டிக்கட் வாங்கிப் பார்த்திருக்கிறார்கள். அது பெரிய தவறு. ஏனென்றால் பொதுமக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கள்ள டிக்கட் விற்ற கவுண்டரிலே இருந்தவர்களைப் போலீசாரிடம் பிடித்துக் கொடுத்து விட்டு, அவர்கள் அடுத்த ஆட்டத்திற்குப் போயிருக்கலாம். அதனால் அரங்கேற்றம் எங்கும் போய்விடாது. ஆகவே, பொறுப்புள்ள உறுப்பினர்கள் இனிக் குற்றங்களைக் கண்டுபிடிக்க உதவியாக இருக்க வேண்டும்.

திரு. எஸ். வடிவேல்: நாம் கவனம் செலுத்த வேண்டிய வேறு எத்தனையோ கள்ளச் சந்தைகள் இருக்கும் இதிலேபோய் நாம் விலைக் காலத்தையும், கருத்தையும் செலுத்த வேண்டுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தக் கேள்வியில் உறுப்பினர் கவனம் செலுத்தாமல் இருப்பது நல்லது.

Liquor shops

* 210 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the temple lands and premises in which (1) Arrack, (2) Toddy and (3) Liquor shops have been opened in Madras City?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னை மாநகரில் கோவில் நிலம் எதிலும் அல்லது கோவில் வளவுகளில் எதிலும் கள்ளுக்கடையோ, சாராயக் கடையோ, மதுக்கடையோ அமைந்திருக்கவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கோயில்கள் ஆகியவற்றுக்கு அருகில் கள். சாராயக் கடைகளைத் திறக்கக் கூடாது என்பதாக விதியிருந்தும் பலயிடங்களில் கடைகளைத் திறந்துவிடுகிறார்கள். பிறகு அரசாங்கத்திற்கு ஆட்சேபணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. வேறு சில கடைக்காரர்கள் வழக்கு தொடருகிறார்கள். ஆகவே கடைகளைத் திறப்பதற்கு முன்னாலேயே இன்னின்ன இடங்களில்தான் திறக்கலாம் என்று சம்பந்தப்பட்ட நகராட்சி மன்றங்களையும், ஊராட்சி மன்றங்களையும் கலந்து முடிவு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அடுத்த ஆண்டு ஏலம் விடுவதற்கு முன்பாக நகராட்சிகளில் எந்த எந்த இடத்தில் திறக்கலாம் என்று முடிவு செய்ய இருக்கிறோம்.